பக்கங்கள் 18+3

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | கார்த்திகை 11 செவ்வாய்க்கிழமை 26.11.2024 | அதிர்வு 117



‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




## வல்வெட்டித்துறையில் தலைவர் பிரபாகரனின் வீட்டில்

# கேக் வெட்டி பிறந்தநாள் கொண்டாட்டம்



(எஸ்.நிதர்ஷன்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரனின் 70 ஆவது பிறந்த தினமான இன்று (நவம்பர் மாதம்26ஆம்திகதி)செவ்வாய்க் கிழமை யாழ். வல்வெட்டித் துறையில்கேக்வெட்டிவெகுவிமர்சையாகக் கொண்டாட்டப்பட்டது.

வல்வெட்டித்துறை, ஆலடி பகுதியில் அமைந்துள்ள தலைவர் பிரபாகரனின் பூர்வீக வீடு அமைந்திருந்த காணிக்குள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கத்தின் ஏற்பாட்டில் கொண்டாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

கேக் வெட்டி, இனிப்புகள் வழங்கி பிறந்த தினம் கொண்டாடப்பட்டதுடன், இந்த நிகழ்வின் சிறப்பம்சமாகத் தலைவர் பிரபாகரனின் வீட்டு வளாகத்துக்குள் சிறுவர்கள் மற்றும் பொது மக்களால் 70 மரங்கள் நாட்டப்பட்டன.

02








# கேக் வெட்டி பிறந்தநாள் கொண்டாட்டம்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேவேளை, அங்கு தலைவர் பிரபாகரனின் புகைப்படத்தைத் தாங்கிய பதாகை ஒன்றும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. அதன்போது அங்கு வந்த வல்வெட்டித்துறைப் பொலிஸார் பிரபாகரனின் புகைப்படத்தைக் காட்சிப்படுத்த முடியாது என்றும், அதற்குச் சட்டத்தில் இடமில்லை என்றும், புகைப்படத்தை நீக்கிவிட்டு பிறந்தநாள் கொண்டாட்ட நிகழ்வுகளை நடத்துங்கள் என்றும் அறிவுறுத்தினார்கள்.

அதன் பிரகாரம் பதாகையில் இருந்த தலைவர் பிரபாகரனின் புகைப்படத்தை மறைத்து விட்டு பிறந்தநாள் நிகழ்வை மக்கள் சிறப்பாகக் கொண்டாடினார்கள். 70 மாணவர்களுக்கான கல்வி உபகரணங்களும் இதன்போது வழங்கப்பட்டன.














# வடக்கு மாகாணத்தில் சீரற்ற காலநிலை காரணமாக 48 ஆயிரத்து 577 பேர் பாதிப்பு

(ந.லோகதயாளன்)

வடக்கு மாகாணத்தில் தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக 15 ஆயிரத்து 427 குடும்பங்களைச் சேர்ந்த 48 ஆயிரத்து 577 பேர் பாதிப்படைந்துள்ளனர் என்று மாவட்ட அரச அதிபர்கள் அனர்த்த முகாமைத்துவப் பிரிவுக்கு அறிக்கையிட்டுள்ளனர்.

இதற்கமைய யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 2 ஆயிரத்து 40 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 436 அங்கத்தவர்கள் பாதிப்படைந்துள்ளதுடன் பலர் இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கும் நிலை ஏற்பட்டுள்ளதுடன் 34 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என்றும் அறிக்கையிடப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 536 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 861 அங்கத்தவர்கள் பாதிப்படைந்துள்ளதுடன் 56 குடும்பங்களைச் சேர்ந்த 175 பேர் இடைத்தங்கல் முகாம்களில் தங்கியிருக்கின்றனர் என்றும் அறிக்கையிடப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 135 குடும்பங்களைச் சேர்ந்த 442 பேர் பாதிப்படைந்துள்ளதுடன் 50 குடும்பங்களைச் சேர்ந்த 153 பேர் இடைத்தங்கல் முகாம்களில் தங்கியிருக்கும் அதேநேரம் ஒரு வீடு பகுதியளவில் சேதமடைந்துள்ளது என்றும் அறிக்கையிடப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் 12 ஆயிரத்து 629 குடும்பங்களைச் சேர்ந்த 43 ஆயிரத்து 910 பேர் பாதிப்படைந்துள்ளதுடன் 459 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 547 பேர் இடைத்தங்கல் முகாம்களில் தங்கியிருக்கும் அதேநேரம் 5 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என்றும் அறிக்கையிடப்பட்டுள்ளது.

இதேநேரம் வவுனியா மாவட்டத்தில் 87 குடும்பங்களைச் சேர்ந்த 324 பேர் பாதிப்படைந்துள்ளனர் என்றும் அறிக்கையிடப்பட்டுள்ளது.





# மாவீரரை உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்க தயார் நிலையில் புதுக்குடியிருப்பு நகர் பகுதி

தாயக விடுதலைப் போராட்டத்தில் உயிர்நீத்த வீரமறவர்களைப் போற்றி வணங்கும் மாவீரர் நாளுக்கான அலங்கரிப்புப் பணிகள் புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் நடைபெற்றுள்ளன. அந்தவகையில் மாவீரர்களை நாளை புதன்கிழமை உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப் புதுக்குடியிருப்பு நகர் பகுதி தயார் நிலையில் இருக்கின்றது.

(படங்கள்:- பா.சதீசன்)

































# யாழ். நோக்கி வந்த பஸ் விபத்து! பெண் ஒருவர் பரிதாப மரணம்!!

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த தனியார் பஸ் ஒன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

புனேவ பிரதேசத்தில் இன்று செவ்வாய்க்கிழமை அதிகாலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

தற்போது பெய்து வரும் மழை காரணமாக வீதியில் வழுக்கும் நிலைமை காணப்பட்டதால் விபத்து ஏற்பட்டுள்ளது என்று ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.



உயிரிழந்த பெண்ணின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வவுனியா பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

விபத்து சம்பவம் தொடர்பில் புனேவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஆகஷூக்கு ஆளுநர் வாழ்த்து



இலங்கை 17 வயதுக் குட்பட்டோருக்கான கிரிக்கெட் அணியில் இடம்பிடித்து மிகச் சிறப்பான பந்துவீச்சுப் பெறுதியை பதிவுச் செய்த யாழ்ப்பாணம், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் மாணவன் விக்னேஸ்வரன் ஆகாஷ்க்கு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

ஆகாஷை தொலைபேசியூடாக நேற்று திங்கட்கிழமை தொடர்புகொண்ட ஆளுநர், அவரை வாழ்த்தியதுடன் எதிர்காலத்தில் இலங்கை கிரிக்கெட் அணியில் இடம் பிடிக்க வேண்டும் எனவும், தொடர்ந்து சாதனைகளைப் படைக்க வேண்டும் என்றும் ஆளுநர் ஆகாஷிடம் தெரிவித்தார்.

இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான 17 வயதுக்குட்பட்டோருக்கான ஆட்டத்தில் விளையாடிய ஆகாஷ், 5 இலக்குகளை வீழ்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மன்னாரில் நடைபெறவிருந்த நடமாடும் சேவை ஒத்திவைப்பு

### ஆளுநரின் ஊடகப் பிரிவு அறிவிப்பு



மன்னார் மாவட்ட செயலகத்தில் நாளை புதன்கிழமை நடைபெறவிருந்த வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையிலான நடமாடும் சேவை, நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று ஆளுநரின் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் ஆளுநரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## யாழில் மழையைச் சாதகமாகப் பயன்படுத்தி 52 பவுண் நகை, 8 இலட்சம் ரூபா பணம் திருட்டு

யாழ்ப்பாணம், அச்சுவேலி பகுதியில் உள்ள வீடொன்றினுள் புகுந்த திருடர்கள், சுமார் 52 பவுண் நகைகள் மற்றும் 8 இலட்சம் ரூபா பணம் என்பவற்றைத் திருடிச் சென்றுள்ளனர்.

அச்சுவேலி, இராச பாதை வீதியில் உள்ள வீடொன்றில் நேற்று திங்கட்கிழமை கடும் மழை பெய்து கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் புகுந்த திருடர்கள் நகைகள் மற்றும் பணத்தைத் திருடிச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் வீட்டு உரிமையாளர் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

மோப்ப நாய் மற்றும் தடயவியல் பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் மூன்று சந்தேகநபர்களைப் பொலிஸார் கைது செய்து, அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# வவுனியாவில் தொடர் மழை காரணமாக 120 குளங்கள் நிரம்பி வான் பாய்கின்றன

## மூன்று குளங்கள் உடைப்பு



(கி.வசந்தன்)

வவுனியாவில் தொடர்ச்சியாகப் பெய்து வரும் கடும் மழை காரணமாக 120 இற்கும் மேற்பட்ட குளங்கள் முழுக்கொள்ளவை எட்டி வான் பாய்வதுடன், 3 குளங்கள் உடைப்பெடுத்துள்ளதாகவும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

வவுனியாவில் கடந்த சில நாட்களாக மழையுடனான காலநிலை நிலவி வருகின்றது. இதனால் தாழ்நிலப் பகுதிகளில் வெள்ள நீர் நிறைந்து காணப்படுவதுடன், பொது மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்துள்ளது.

இந்நிலையில், வவுனியாக்குளம் தனது முழுக்கொள்ளளவை எட்டியுள்ளதுடன், வான் பாய ஆரம்பித்துள்ளது.

இதேவேளை, வவுனியா மாவட்டத்தின் 120 இற்கும் மேற்பட்ட குளங்கள் தனது முழுக்கொள்ளளவை எட்டி மேலதிக நீர் வெளியேறி வருவதுடன், அநேகமான குளங்களில் 90 சதவீதமான அளவு நீர் நிறைந்துள்ளது.

இதுவரை செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள இராமயன் குளம், அருவித்தோட்டம் – நாகராயன் குளம் மற்றும் வவுனியா பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள மடத்துவிளாங்குளம் ஆகியவற்றின் அணைக்கட்டுகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அவற்றைச் சீர்செய்யும் பணிகளில் அதிகாரிகளின் ஆலோசனைகளுடன் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

# அர்ச்சுனாவுக்குப் பிடியாணை

யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனாவுக்குப் பிடியாணை பிறப்பிக்குமாறு கொழும்பு மேலதிக நீதிவான் மஞ்சுளா ரத்நாயக்க உத்தரவிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஊடாக அர்ச்சுனாவுக்குப் பிடியாணை பிறப்பிக்குமாறு இன்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு – பேஸ்லைன் வீதியில் கடந்த 2021ஆம் ஆண்டு மார்ச் 22ஆம் திகதி காரைச் செலுத்திச் சென்ற அர்ச்சுனா இன்னுமொரு காரை மோதி விபத்தை ஏற்படுத்தியதுடன், அந்தக் காரின் சாரதியைத் தாக்கிக் கடுமையாகக் காயப்படுத்தினார் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்தநிலையில், சந்தேகத்துக்குரிய இராமநாதன் அர்ச்சுனா தொடர்ந்தும் வழக்கு விசாரணைகளில் முன்னிலையாவதைத் தவிர்த்து வருவதனால் அவருக்குப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனாவுக்கு எதிராகக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் பல முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.






# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அரசின் கண்காணிப்பு

இது மாவீரர் வாரம். நாளை மாவீரர் நாள். இந்நாளை தமிழினத்தின் மாவீரர்களின் பெருநாளாக, தமிழ்த் தியாகிகளின் திருநாளாக, தமிழர் தேசத்தின் தேசிய நாளாக, தமது இனம் சுதந்திரம் வேண்டி உறுதிபூணும் புரட்சிநாளாக தமிழர்கள் கொண்டாடுகின்றார்கள்.

இந்த உலகத்தைத் துறந்து, இளமையின் இனிமையான உணர்வுகளைத் துறந்து, சாதாரண வாழ்வின் சகலவற்றையும் துறந்து, தமது மண்ணுக்காக, தமது மக்களுக்காக, தமது மக்களது உயிர்வாழ்விற்காகத் தமது உன்னதமான உயிர்களை உவந்தளித்த உத்தமர்களுக்கு இன்று தமிழர் தேசம் சிரந்தாழ்த்தி வணக்கம் செலுத்துகின்றது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இன்றும், நாளையும் மாவீரர் தின நிகழ்வுகள் மற்றும் யுத்தத்தில் உயிர்த்தவர்களின் உறவினர்கள் ஏற்பாடு செய்துள்ள நிகழ்வுகள் பரந்தளவில் இடம்பெற உள்ளன.

அத்தகைய நிகழ்வுகளுக்கான மட்டுப்படுத்தப்பட்ட அனுமதியை வழங்கியுள்ள தேசிய மக்கள் சக்தியின் புதிய அரசு அந்நிகழ்வுகளை முழுமையாகக் கண்காணிக்க இராணுவத்தினருக்கும், பொலிஸாருக்கும். உத்தரவிட்டுள்ளது. அதேசமயம் இவ்விடயங்களை உன்னிப்பாக நோட்டமிடுவதற்கு பாதுகாப்பு அமைச்சால் உரிய ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன என்றும் கூறப்பட்டது.

யுத்தத்தில் உயிர் நீத்தவர்களை நினைவுக் கூரும் வகையில் இன்றும், நாளையும் வடக்கு மாகாணத்தில் பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இதில் உயிர் நீத்தவர்களின் உறவினர்கள் மற்றும் வடக்கின் அரசியல் தலைவர்களும் கலந்துகொள்ள உள்ளனர். அதேபோன்று கிழக்கு மாகாணத்திலும் சில நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வுகளை முழுமையாக கண்காணிப்பதற்கான ஆலோசனைகளை பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால, பொலிஸாருக்கு வழங்கியுள்ளார். அதேபோன்று பாதுகாப்பு அமைச்சின் சார்ப்பில் இராணுவத்தினருக்கு கண்காணிப்பதற்கான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர், “உயிரிழந்த உறவினர்களை எவருக்கும் சட்டப்படி நினைவுகூர முடியும். ஆனால், புலிகளின் சின்னத்தையோ சீருடைகளையோ அவர்களின் படங்களையோ பயன்படுத்தி மாவீரர்களை கொண்டாடுவதற்கு இடமில்லை. நாட்டில் சட்டம் உள்ளது. சட்டத்தின் படி புலிகள் அமைப்பு தடை செய்யப்பட்ட அமைப்பு. என்றாலும், வடக்கு, கிழக்கு, தெற்கு அல்லது மலையகப் பகுதி என எதுவாக இருந்தாலும், உங்கள் உறவினர், பிள்ளைகள் எவரும் உயிரிழந்திருந்தால் அவர்களை நினைவுகூர அனைவருக்கும் உரிமை உண்டு.” எனக் கூறியுள்ளார்.

இதனால் இரண்டு தினங்களிலும் அனுஷ்டிக்கப்படும் நினவேந்தல் நிகழ்வுகளையும், நிகழ்வில் கலந்துகொள்பவர்களது செயல்பாடுகளையும் கண்காணிப்பதற்காக பாதுகாப்புப் படையினரை விழிப்புடன் வைத்திருக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அரசைப் பொறுத்தவரை சட்டவிரோதமான முறையில் பயங்கரவாத அமைப்பை அல்லது பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்தவர்கள் நினைவுகூரும் எந்தவொரு நபரையும் கைது செய்வதற்கான ஆலோசனைகளும் வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

வடக்கில் பல பகுதிகளிலும் மாவீரர் துயிலும் மயானங்களில் இடம்பெறும் துப்புரவு நடவடிக்கை குறித்து வடக்கு பாதுகாப்பு தரப்பினர் தனிமைப்படுத்தல் சட்டத்தின் பிரகாரம் உரிய நபர்களிடம் வாக்குமூலங்களைப் பெறநடவடிக்கைஎடுத்துள்ளதாகவும் தெரியவருகிறது.

நாளை நவம்பர் 27 ஆம் திகதி நடைபெறவுள்ள மாவீரர் நிகழ்வுகளை அனுஷ்டிக்க வடக்கு, கிழக்கில் உள்ள சில சிவில் அமைப்புகளும், சர்வதேச ரீதியில் இயங்கும் தமிழ் அமைப்புகளும் அழைப்பு விடுத்துள்ளன.

உயிரிழந்தவர்கள் ஒவ்வொருவரது வீட்டிலும் தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்துமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

என்றாலும், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக உயிரிழந்தவர்களை அனுஷ்டிக்கும் நிகழ்வுகள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இந்தத் தடவை மாவீரர் தினத்தில் உயிரிழந்த தமது உறவுகளுக்கு தமிழ் மக்கள் நினைவேந்த புதிய அரசு அனுமதி அளித்துள்ள அதேவேளை, அந்நாளை மாவீரர்களையோ விடுதலைப் புலிகளையோ போற்றுவதற்கான நாளாக பயன்படுத்தாமல் தடுப்பதில் இந்த அரசும் கருத்தாக இருக்கிறது என்பதே இந்த விடயங்களின் பொருள்.



# பண்டாரவளை பிந்துணுவேவ பகுதியில் மண்மேடு சரிந்ததில் பெண் ஒருவர் பலி!

(நடராஜா மலர்வேந்தன்)

நிலவும் மழையுடன் கூடிய சீரற்ற காலநிலை காரணமாக பதுளை மாவட்டத்தில் மக்களின் இயல்பு நிலை பாதிப்படைந்துள்ளது. பண்டாரவளை பிந்துணுவேவ பகுதியில் வீடொன்றினுள் மண்மேடு சரிந்து விழுந்தமையால் பெண்ணொருவர் (61) பலியாகியுள்ளார்.

கடந்த சில நாள்களாக மாவட்டத்தில் அடைமழை பெய்து வருகிறது. இதன் காரணமாக மாவட்டத்தின் லுணுகல, பசறை, பதுளை, எல்ல, ஹல்தமுல்ல, ஹாலிஎல, மகியங்கன ஆகிய பிரதேசங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பிரதான வீதிகளில் போக்குவரத்துத் தடையும் ஸ்தம்பிதமும் ஏற்பட்டுள்ளது. பசறை – பதுளை பிரதான வீதி, பதுளை – பண்டாரவளை பிரதான வீதி ஏழாம் கட்டை, ஹப்புதளை – பெரகல வீதி, மடுல்சீமை – குருவிகலை வீதி, பதுளை – ஸ்பிரிங்வெளி கந்தீயானை வீதி, பிபில – லுணுகல வீதி, பசறை – லுணுகல வீதிகளில் மண்மேடு சரிவும், கற்பாறைகள் சரிந்தும் போக்குவரத்து பாதிப்படைந்துள்ளது.

மலைப்பாங்கான பகுதிகளில் வசிக்கும் மக்கள் அவதானமாக செயற்படுமாறு இடர் முகாமைத்துவ பிரிவினரால் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை பதுள்ள ஓயாவின் நீர் மட்டமும் அதிகரித்துள்ளதால் இந்தப் பகுதியை அண்மித்து வசிப்போர் அவதானமாக இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

அதிகரித்த மழையால் பெருமளவிலான பயிர்செய்கை நிலங்களும் நீரில் மூழ்கியுள்ளன.





# மன்னார் பொது வைத்தியசாலை ஊழியர் அடையாள கவனவீர்ப்பு!

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் வைத்தியர்கள், ஊழியர்கள், சுகாதாரப் பணியாளர்கள் இணைந்து இன்று செவ்வாய்கிழமை (26) மதியம் ஒரு மணியளவில் வைத்தியசாலைக்கு முன் கொட்டும் மழையில் அடையாள கவனவீர்ப்பு ஒன்றை அமைதியான முறையில் வைத்தியசெயற்பாடுகளுக்கு இடையூறு இன்றி மேற்கொண்டுண்டனர்.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் அண்மையில் உயிரிழந்த தாய் மற்றும் சிசுவின் மரணம் தொடர்பில் இடம் பெற்ற போராட்டத்தின் போது மக்கள் உண்மைகளை அறியாது ஒட்டு மொத்த வைத்தியசாலை மற்றும் வைத்தியசாலைச் செயற்பாடு தொடர்பில் அதிருப்தி அடைந்தனர். இதனால் ஏற்பட்டுள்ள மன ரீதியான பாதிப்பு மற்றும் நிர்வாக ரீதியான பிரச்சினைகளை மக்கள் அறிந்து கொள்ளச் செய்யும் விதமாக இந்தக் கவனவீர்ப்பு நடவடிக்கை இடம் பெற்றது.


இந்த நடவடிக்கையின் போது தாங்கள் குறித்த சம்பவத்தின் போது இடம்பெற்ற முரண்பாடுகளான செயற்பாட்டால் அப்போதும் இப்போதும் மௌனிகளாக்கப்பட்டுள்ளோம் என்பதை மக்களுக்கு தெரிவிக்கும் முகமாக அனைவரும் கறுப்பு துணியினால் வாய்களை கட்டி கவனவீர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

அதேநேரம் சமூக ஊடகங்களே மக்களுக்கு உண்மையை உரையுங்கள், வன்முறைகளை தூண்டாதீர்கள், வைத்தியசாலை அது உங்கள் சொத்து அதை சேதப் படுத்தாதீர்கள், உயிர் காக்கப் போராட்டம் அதுதான் எங்கள் சேவையின் பிரதான நோக்கம்,100 பேர் செய்ய வேண்டிய வேலைகளை நாங்கள் 50 பேர் செய்கின்றோம் அதை எப்போதாவது சிந்தித்தீர்களா?, வீண் பழி சுமத்தாதீர்கள், எங்கள் வளப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய ஏதாவது செய்யுங்கள், வீசி எறியாதீர்கள்! எங்களை மட்டுமல்ல எம் மீது உம் சொற்களையும் போன்ற பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு கவனவீர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.









EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA





# அனர்த்த நிவாரணப் பணிகளை துரிதப்படுத்துமாறு கோரிக்கை!

## நாடாளுமன்ற உறுப்பினர் ஆதம்பாவா

(வி.ரி.சகாதேவராஜா)

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண காலநிலையால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்குத் தேவையான மனிதாபிமான உதவிகளை துரிதப்படுத்துவதுடன், மழை வெள்ளம் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவ நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை தேசிய மக்கள் சக்தி கட்சியின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவா கேட்டுள்ளார்.

அதேவேளை, அனர்த்த நிலைமை தொடர்பில், கிழக்கு மாகாண ஆளுநர், அம்பாறை மாவட்ட செயலர், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையப் பிரதிப் பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அதிகாரிகளை இன்று (26) தொடர்பு கொண்டு பேசிய நாடாளுமன்ற உறுப்பினர் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் தேவையான உதவிகளை முன்னெடுக்குமாறும் கேட்டுக் கொண்டுளார்.

அதேவேளை, வெள்ளத்தால் இழுத்து வரப்பட்டு சாய்ந்தமருதில் உள்ள கரைவாகு ஆற்று பாலத்தில் தேங்கி, வெள்ள நீர் வடிந்தோட தடையாக உள்ள சல்வீனியா தாவரங்களை அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு கல்முனை பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளருக்குத் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து சாய்ந்தமருது பிரதேச செயலாளரின் கண்காணிப்பின் கீழ் நீர்ப்பாசன திணைக்களத்துக்குச் சொந்தமான கனரக வாகன உதவியுடன் சல்வீனியா அகற்றும் பணிகள் தற்போது துரிதமாக முன்னெடுக்கப்படுகிறது.



# அம்பாறை பிரதான வீதிகளில் வெள்ளம்; போக்குவரத்து ஸ்தம்பிதம்: மக்கள் அவலம்!

(வி.ரி. சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தின் பிரதான வீதிகள் பலவற்றில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது . மேலும் வீதிக்கு குறுக்காக பாரிய மரங்கள் சரிந்து விழுந்து போக்குவரத்தை ஸ்தம்பிதமடையச் செய்துள்ளன.

இதனால் வழமையான போக்குவரத்துகள் ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளன.

குறிப்பாக கல்முனையையும் நாவிதன்வெளி பிராந்தியத்தையும் இணைக்கும் கிட்டங்கி தாம்போதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

காரைதீவு அம்பாறை பிரதான வீதியில் உள்ள காரைதீவு மாவடிப்பள்ளி தாம்போதியும் வெள்ளத்தில் மூழ்கியது. அதேபோன்று மல்வத்தை வளத்தாப்பட்டி பிரதான வீதியும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

இதனால் பெரிய வாகனங்களை தவிர ஏனைய வாகனங்கள் பயணிக் முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. போக்குவரத்து ஸ்தம்பித்து இருக்கின்றது. அலுவலகங்கள் அரைகுறையாக இயங்கின.

சிரமத்தின் மத்தியில் உயர்தர பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.






# சம்மாந்துறை வலய பாடசாலைகளில் சீரற்ற காலநிலையால் சேதங்கள்!

(வி.ரி.சகாதேவராஜா)

சமகால சீரற்ற காலநிலையால் சம்மாந்துறை வலயக் கல்விப் பணிமனைக்கு உட்பட்ட பல பாடசாலைகள் பாதிக் கப்பட்டுள்ளன.

மரங்கள் விழுந்து சேதத்தை விளைவித்துள்ளன. கட்டடங்களும் சேதம் அடைந்துள்ளன.

மல்வத்தை விபுலானந்தா மத்திய மகா வித்தியாலயம், சம்மாந்துறை அல்முனீர் வித்தியாலயம், மல்வத்தை சீர்பாததேவி வித்தியாலயம், வளத்தாப்பிட்டி தாஹிறா வித்தியாலயம் போன்ற பாடசாலைகளில் மரங்கள் விழுந்து கட்டடங்கள் சேதமடைந்துள்ளன.

அதிபர்கள் சேத விவரம் தொடர்பாக சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். மகேந்திரகுமாரிடம் அறி வித்துள்ளார்கள்.





# வெள்ளைக்காடாய் காட்சியளிக்கும் காரைதீவில் மக்கள் பெரும் பாதிப்பு

(வி.ரி. சகாதேவராஜா)

அம்பாறை மாவட்ட கரையோரத்தில் உள்ள காரைதீவுப் பிரதேசம் வெள்ளக் காடாய்க் காட்சியளிக்கின்றது. இதனால் மக்களின் இயல்பு நிலை பாதிக்கப்பட் டுள்ளது.

வானம் இருண்டு மழை தொடர்ச்சி யாக பெய்து கொண்டிருக்கிறது.

எங்கு பார்த்தாலும் வெள்ளம் கரை புரண்டு ஓடுகின்றது. வீதிகள் மற்றும் தாழ்நில பிரதேசம் எல்லாம் வெள்ளம் ஆக்கிரமித்து இருக்கின்றது .

பல வீடுகள் வெள்ளத்தில் அமரந் துள்ளன. ஆயிரக்கணக்கானோர் வீடு களை விட்டு இடம்பெயர வேண்டிய நிர்க்கதி நிலையில் மக்கள் இருக்கின் றனர்.

கடல் கொந்தளிப்பாக இருக்கும் காரணத்தால் மீனவர்கள் கடலுக்கு செல்லமுடியவில்லை. அங்கு கடல் அரிப்பும் ஏற்பட்டுள்ளது.

அங்கிருந்த சுனாமி நினைவுத் தூ பியும் கடலுக்குள் காவு கொள்ளப்பட் டுள்ளது.

குளவெளி வீட்டுத் திட்டம் 12 ஆம் கிராமம், 06 ஆம் கிராமம் போன்ற பகுதிகளில் கூடுதலான வெள்ளம் தேங்கி நிற்பதால் பொது மக்கள் பலத்த அசௌகரியதை எதிர்கொண்டுள்ளனர்.

பல இடங்களில் மரங்கள் சரிந்து விழுந்திருக்கின்றன. காரைதீவு மாவடிப் பள்ளி வீதியில் வெள்ளம் பாய்வதால் போக்குவரத்து ஸ்தம்பிதமாகியுள்ளது.

# அருகில் உள்ள பரீட்சை நிலையங்களில் மாணவர்கள் தோற்றுவதற்கு அனுமதி!

(பாறுக் ஷிஹான்)

நிலவும் சீரற்ற வானிலை காரணமாக உரிய பரீட்சை நிலையங்களுக்குச் செல்ல முடியாத உயர்தர பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களை அருகில் உள்ள பரீட்சை நிலையத்துக்குச் செல் லுமாறு பரீட்சை திணைக்களம் அறி வித்துள்ளது.

வெள்ளப்பெருக்கு காரணமாக வீதி கள் தடைப்பட்டால் அருகில் உள்ள பரீட்சை நிலையங்களுக்குச் சென்று பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அந்த மாணவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட் டுள்ளது என்று பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித் துள்ளார்.

நாடளாவிய ரீதியில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக சில வீதிகள் வெள்ளத்தில் மூழ்கி போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டுள்ள நிலையில், ஏதாவது பிரச்சினை காணப்பட்டால் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 117 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அழைத்து அறிவிக்குமாறும் பரீட்சை ஆணையாளர் நாயகம் தெரிவித் துள்ளார்.

தற்போதைய நிலையை கருத்தில் கொண்டு உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்குத் தேவை யான வசதிகளை அனர்த்த முகாமைத் துவ நிலையத்தின் ஊடாக வழங்குவ தற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள் ளன.

அனர்த்தங்களால் ஏற்பட்ட போக்கு வரத்துத் தடைகளால் பரீட்சை நிலை யங்களுக்கு வருவதில் சில தாமதங்கள் ஏற்பட்டாலும், அது தொடர்பில் நிவா ரணம் வழங்க பரீட்சை நிலையங் களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது என்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர மேலும் குறிப்பிட்டுள்ளார்.



# மன்னாரில் வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்டவர்கள் 43,879 பேர்!

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்குக் காரணமாக மாவட்டத்தில் 12 ஆயிரத்து 485 குடும்பங்களைச் சேர்ந்த 43 ஆயிரத்து 879 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்று திங்கட்கிழமை (25) மாலை வரை குறித்த எண்ணிக்கையுடைய மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் 16 தற்காலிக நலன்புரி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. உயர் தர பரீட்சைக்கான மத்திய நிலையங்கள் இல்லாத பாடசாலைகள் மற்றும் மத ஸ்தலங்கள், பொது மண்டபங்கள் இவ்வாறு தற்காலிக பாதுகாப்பு நலன்புரி நிலையங்களாக மாற்றப்பட்டுள்ளன.

குறித்த நலன்புரி நிலையங்களில் 419 குடும்பங்களைச் சேர்ந்த 1426 பேர் இவ்வாறு தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

ஏனையவர்கள் உறவினர்களின் வீடுகளில் தங்கியுள்ளனர். மழை வெள்ள நீரைக் கடலுக்கு வெளியேற்றும் நடவடிக்கைகளும் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மாவட்ட அரச அதிபர்.க.கனகேஸ்வரன் தலைமையில், பிரதேச செயலாளர்கள், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவினர், கிராம அலுவலர்கள் தமது கிராமங்களில் பாதிக்கப்பட்ட மக்களின் விவரங்களைத் திரட்டி வருகின்றனர்.

அவர்களுக்கான உதவிகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அனர்த்தங்கள் ஏற்பட்டால் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள முப்படையினரும் தயார் படுத்தப்பட்டுள்ளனர்.

தற்போது தொடர்ந்தும் மழை பெய்து வருவதால் மக்களின் இடப்பெயர்வு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பாதிக்கப்பட்ட மக்களை நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், ரிஷாட் பதியுதீன் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.

மக்களுக்கு தேவையான அத்தியாவசிய உதவிகளை முன்னெடுக்க உரிய அதிகாரிகளை பணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.









# வெள்ளத்தில் மூழ்கிய வைத்தியசாலை; தடையின்றித் தொடரும் வைத்திய சேவை!

(அபு அலா )

அம்பாறை மாவட்டத்தில் தொடராகப் பெய்து வரும் மழையால் அம்பாறை மாவட்டத்திலுள்ள பல பிரதேசங்கள் வெள்ளை நீரில் மூழ்கியுள் ளது. குறிப்பாக அட்டாளைச்சேனை பிரதேச வைத்தியசாலையும் வெள்ள நீரில் மூழ்கி யுள்ளது.

இந்த நிலைமையிலும், மக்களுக்கான வைத்திய சேவைகளை இடைநிறுத்தாது தொடரான வைத்திய சேவைகளை, வைத்திய பொறுப்பதிகாரி வைத்தியர் யூ.எல்.எம்.வபா தலைமையில் அனைத்து வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் அனைவரும் ஒன்றிணைந்து தங்களின் பணியை மக்களுக்காக வழங்கி வருகின்ற மையும் குறிப்பிடத்தக்கது.




# சமாதான நீதிவான்களுக்கான கருத்தரங்கும் பொதுக் கூட்டமும்

(பழுவூரான்)

கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக சமாதான நீதிவான்களின் நலனைக் கருத்தில் கொண்டு செயற்பட்டுவரும் மட்டக்களப்பு மாவட்ட சமாதான நீதி வான்கள் சமூக மேம்பாட்டு மையம் நடத்தும் சமாதான நீதிவான்களுக்கான கருத்தரங்கும் பொதுக்கூட்டமும் எதிர்வரும் சனிக்கிழமை (30) காலை 8.30 மணிக்கு மண்முனைப்பற்று, ஆரையம்பதி பிரதேச செயலக கேட் போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் பிரபல சட்டத்தரணிகள் இருவர் கலந்து கொண்டு "சமாதான நீதிவான்களும் அதன் பயன்பாடுகளும்" என்னும் தொனிப் பொருளில் வளவாண்மை மேற்கொள்ளவுள்ளனர்.

மேற்படி நிகழ்வில் சமாதான நீதி வான்களின் நலனினைக் கருத்தில் கொண்டு செயற்படும் மேற்படி சங்கத் துக்குப் புதிய உறுப்பினர்களும் சேர்த் துக் கொள்ளப்படவுள்ளனர்.

சமாதான நீதிவான்களின் நலனைக் கருத்தில் கொண்டு செயற்படும் இந்தச் சங்கத்துடன் இணைந்து செயற்பட விரும்பும் சமாதான நீதிவான்கள் அனைவருக்கும் நிர்வாகத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

கலந்து கொள்ள விரும்பும் சமாதான நீதிவான்கள் தங்களது விவரங்களை முற்கூட்டியே பதிவு செய்வதற்கும், மேலதிக விவரங்களைப் பெறுவதற்கும் 0776016218, 077 6027537 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர் பினை மேற்கொண்டு தங்களது வரவை 27 ஆம் திகதிக்கு முன்னர் உறுதிப் படுத்திக் கொள்ளுமாறும் கேட்கப் பட்டுள்ளது.



# வெள்ளத்தில் மூழ்கியுள்ளன நுவரெலியாவில் பல வீதிகள்

(தலவாக்கலை பி.கேதீஸ்)

நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக நுவரெலியா கந்தபொல வீதி, நுவரெலியா – உடடபுசல்லாவ வீதியும் என்பன இன்று (26) அதிகாலை முதல் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன என்று நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

நுவரெலியா – உடடபுஸ்ஸல்லாவ வீதியைப் போன்று கந்தபொல மற்றும் அதனைச் சூழவுள்ள தாழ்நிலப் பகுதிகளில் பயிரிடப்பட்டிருந்த பெருமளவிலான மரக்கறி நிலங்களும் நீரில் மூழ்கியுள்ளன.

நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைய அதிகாரிகள், உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களை உரிய நேரத்தில் பரீட்சை நிலையங்களுக்கு செல்ல போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர் என்று நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபட தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்டம் முழுவதும் மழை பெய்து வருகின்றது. இதனால் இப்பிரதேச மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

பெருந்தோட்ட தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் ஏனைய மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கும் சிரமங்களுக்கும் முகம் கொடுத்து வருகின்றனர்.



# திருமலையில் 623 குடும்பங்கள் சீரற்ற கால நிலையால் பாதிப்பு!

(ஹஸ்பர்)

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாகத் திருகோணமலை மாவட்டத்தில் இன்றுவரைக்கும் (26) 623 குடும்பங்களை சேர்ந்த 1789 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் திருகோணமலை மாவட்ட பிரதிப் பணிப்பாளர் கே.சுகுணதாஸ் தெரிவித்தார்.

இதில் சேருநுவர பிரதேச செயலக பகுதியில் 26 குடும்பங்களை சேர்ந்த 69 நபர்களும், மூதூர் பிரதேச செயலாளர் பிரிவை சேர்ந்த 440 குடும்பங்களை சேர்ந்த 1152 நபர்களும், தம்பலகாமம் பிரிவில் சேர்ந்த 08 குடும்பங்களை சேர்ந்த 40 நபர்களும், வெருகல் பிரதேச செயலக பிரிவை சேர்ந்த 01 குடும்பத்தை சேர்ந்த 2 நபர்களும், திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த 148 குடும்பங்களை சேர்ந்த 526 நபர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். 177 குடும்பங்கள் உறவினர்களின் வீடுகளிலும் 19 குடும்பங்கள் இடைத் தங்கள் முகாம்களிலும் தங்க வைக்கப்பட்டுள்ளன என்றும் மேலும் தெரிவித்தார்.








# சீரற்ற காலநிலை காரணமாக அம்பாறையில் அவல நிலை!

## 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிப்பு

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டத்தில் தற்பொழுது தொடர்ச்சியாக ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது என்று அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைய பிரதிப் பணிப்பாளர் எம்.ஏ.சி.எம். றியாஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று முதல் பெய்து வரும் தொடர் மழை காரணமாக தாழ்நிலைப் பிரதேசங்கள் மற்றும் கரையோர பிரதேசங்களை அண்டி வாழும் மக்கள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தில் இந்த சீரற்ற காலநிலை காரணமாக 10 இற்கும் மேற்பட்ட பிரதேச செயலாளர் பிரிவுகளில் பாதிப்பு உணரப்பட்டுள்ளது.

கல்முனை, நாவிதன்வெளி, சம்மாந்துறை, நிந்தவூர், காரைதீவு, சாய்ந்தமருது , அட்டாளைச்சேனை, அக்கரைப் பற்று , ஆலையடிவேம்பு, திருக்கோவில், இறக்காமம், உகண பிரதேச செயலாளர் பிரிவுகளில் இந்தப் பாதிப்பு உணரப்பட்டுள்ளது.

இதன் காரணமாக அம்பாறை மாவட்டத்தில் 10 ஆயிரத் துக்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் பாதிக்கப் பட்டுள்ளனர்.

அத்துடன் அம்பாறை மாவட்டத்தில் வெள்ள நீர் பரவலால் கிட்டங்கி மற்றும் மாவடிப்பள்ளி வீதி நீரில் மூழ்கியது. இதனால் போக்குவரத்து மேற்கொள்வதில் பிரதேச மக்கள் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

அடைமழை காரணமாக நாவிதன்வெளி பிரதேச செயலர் பிரிவிலுள்ள கல்லோயா குடியேற்ற கிராமங்களையும் கல்முனை நகரையும் இணைக்கும் கிட்டங்கி வீதியின் மேலாக வெள்ள நீர் பரவ ஆரம்பித்துள்ளது. இவ்வீதியூடாக போக்குவரத்து மேற்கொள்வதில் பிரதேச மக்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.





மேலும் சம்மாந்துறை பிரதேச செயலகத்தையும் காரைதீவு பிரதேச செயலகத்தையும் இணைக்கும் மாவடிப்பள்ளி பால மும் வெள்ள நீரில் மூழ்கியுள்ளது. இதனூடாக போக்குவரத்து செய்யும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்ற னர்.

இவ்விரு பகுதிகளின் ஊடாக மக்கள் போக்குவரத்தை மேற்கொள்ள இலங்கை கடற்படை வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் பிரதேச செயலகம் நடவடிக்கை மேற் கொண்டுள்ளன. தினமும் விவசாயிகள், அலுவலக உத்தி யோகத்தர்கள் , பொதுமக்கள் என ஆயிரக்கணக்கானவர்கள் நாளந்தம் பயணிக்கும் இவ்வீதியில் வெள்ள நீர் பரவி வருவதால் இச்சிரம நிலை ஏற்பட்டுள்ளன.









# சந்நிதியான் ஆச்சிரமம் நல்லூரில் வெள்ள நிவாரண உதவி வழங்கல்

யாழ்ப்பாணம், வடமராட்சி, தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால், தற்போது மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சங்கிலியன் தோப்பு ஜே - 109 கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த 77 குடும்பங்களுக்கு 3 லட்சத்து 85 ஆயிரம் ரூபா பெறுமதியான அத்தியவசியமான உணவுப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன.

நல்லூர் சாமந்திப் பூ மகளிர் சுய உதவிக் குழுத் தலைவர் க.விஜயலோயினி தலைமையில் வேல்முருகன் சனசமூக நிலையத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் உலர் உணவு பொதிகளை வழங்கிவைத்தார். கிராம சேவையாளர் என்.ஜெயவந்தனும் இதில் கலந்து கொண்டார்.







# மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் வான்கதவுகள் இரண்டு திறப்பு!

## மக்களை அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்து

(க.கிஷாந்தன்)

மத்திய மலைநாட்டில் இடைவிடாது பெய்து வரும் அடைமழையால் நீர்த்தேக்கங்களின் நீர் மட்டமும் வெகுவாக அதிகரித்து வருகின்றது.

பெய்து வரும் மழையால் நீரோடைகள், ஆறுகள் என பெருக்கெடுத்து நீரேந்தும் பகுதிகளில் நீர் மட்டம் அதிகரித்து காணப்படுகின்றது.

மேல் கொத்மலை, விமலசுரேந்திர, காசல்ரீ ஆகிய நீரேந்தும் பகுதிகளில் அதிகமான நீர்மட்டம் காணப்பட்டது.

இந்த நீரை வெளியேற்றுவதற்காக இன்று (26) நீரேந்தும் பகுதிகளில் வான் கதவுகள் திறக்கப்பட்டன.

இந்த நிலையில் மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் இரண்டு வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

அத்தோடு காசல்ரீ நீர்தேகத்தின் நீர்மட்டமும் அதிகரித்துள்ளது. இதனால் நீர்தேக்க பகுதிகளில் தாழ்வான பிரதேசத்தில் வாழும் குடியிருப்பாளர்கள் அவதானத்துடன் இருக்கும் படி அதிகாரிகளால் பணிக்கப்பட்டுள்ளது. அத்துடன், மேல் கொத்மலை அணைக்கட்டுக்கு கீழ் ஆற்றுப் பகுதியை பயன்படுத்துபவர்கள் விழிப்புடன் இருக்குமாறு கோரப்பட்டுள்ளது.

# உத்தர பிரதேச கலவரத்தில் உயிரிழப்பு 5 ஆக உயர்வு

உத்தர பிரதேசத்தில் இடம்பெற்ற கலவரத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 5 ஆக அதிகரித்துள்ளது. இது தொடர்பாக சமாஜ்வாதி எம்.பி. மற்றும் எம்.எல்.ஏ. மகன் உள்ளிட்டோர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

உத்தர பிரதேச மாநிலம் சம்பல் மாவட்ட நீதிமன்றத்தில் மூத்த வழக்கறிஞர் விஷ்ணு சங்கர் ஜெயின் கடந்த 19 ஆம் திகதி ஒரு மனு தாக்கல் செய்தார். அதில், "சம்பல் மாவட்டம் சந்தவுசி நகரில் ஹரிஹர் கோயில் இருந்தது. முகலாயர் காலத்தில் இந்தக் கோயிலின் ஒரு பகுதி இடிக்கப்பட்டு ஷஹாஹி ஜமா மசூதி கட்டப்பட்டது. இதுகுறித்து ஆய்வு நடத்த வேண்டும்" என கோரியிருந்தார்.

இந்த மனுவை அன்றைய தினமே விசாரித்த நீதிபதி ஆதித்யா சிங் மசூதியில் அன்றைய தினமே ஆய்வு நடத்த உத்தரவிட்டார். இதற்காக வழக்கறிஞர் ஆணையர் ரமேஷ் ராகவ் தலைமையில் ஒரு குழுவை நியமித்த அவர், எதிர்வரும் 29 ஆம் திகதிக்குள் அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட்டார். இதைத்தொடர்ந்து, அந்தக் குழுவினர் அன்றைய தினமே முதல்கட்ட ஆய்வை தொடங்கினர்.

இந்நிலையில், ஆய்வுக் குழுவினர் இரண்டாவது நாளாக நேற்று முன்தினம் ஆய்வு மேற்கொள்வதற்காக ஜமா மசூதிக்கு சென்றனர். அப்போது அங்கு கூடியிருந்த மக்கள் மசூதியில் ஆய்வு நடத்துவதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இதையடுத்து, பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸார் ஆய்வுக் குழுவினரை மசூதிக்குள் அழைத்துச் செல்ல முயன்றனர்.

அப்போது போலீஸார் மீது போராட்டக்காரர்கள் கற்களை வீசி தாக்குதல் நடத்தியதுடன் வாகனங்களை தீயிட்டு கொளுத்தினர். இதையடுத்து, போராட்டக்காரர்களை கலைக்க பொலிஸார் கண்ணீர் புகை குண்டுகளை வீசினர்.



இதனிடையே, போராட்ட கும்பலைச் சேர்ந்தவர்களே துப்பாக்கியால் சுட்டனர் என கூறப்படுகிறது. இந்த வன்முறை சம்பவத்தில் 3 பேர் உயிரிழந்தனர். 20 பொலிஸார் உட்பட காயமடைந்த பலர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்நிலையில், காயமடைந்தவர்களில் 2 பேர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்தனர். இத்துடன் இந்த கலவரத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 5 ஆக அதிகரித்துள்ளது.

இதுகுறித்து மொரதாபாத் மண்டல ஆணையர் ஆஞ்சநேய குமார் சிங் கூறும்போது,

"இந்த கலவரம் தொடர்பான காணொலி காட்சிகளை ஆய்வு செய்து வருகிறோம். அதில் முகமூடி அணிந்த சிலர் கற்களை வீசி உள்ளனர். உயிரிழந்தவர்கள் அருகில் இருந்தவர்களால் துப்பாக்கியால் சுடப்பட்டுள்ளனர். ஆனால் பொலிஸார் தூரத்தில் இருப்பது காணொலியில் தெரியவந்துள்ளது. எனவே, போராட்டக்காரர்கள்தான் துப்பாக்கியால் சுட்டுள்ளனர். இதுகுறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது." – என்றார்.

# குளிர்கால கூட்டத் தொடர் முதல் நாளிலேயே நாடாளுமன்றில் எதிர்க்கட்சிகள் கடும் அமளி

## பிரதமர் மோடி கடும் விமர்சனம்

எதிர்க்கட்சிகளின் அமளியால் நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் நேற்று ஒத்திவைக்கப்பட்டன. மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள் நாடாளுமன்றத்தை முடக்க முயற்சி செய்கின்றனர் என்று பிரதமர் மோடி கடுமையாக விமர்சித்தார்.



நாடாளுமன்ற குளிர்கால கூட்டத் தொடர் நேற்று தொடங்கியது. மக்களவையில், மறைந்த உறுப்பினர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்ட பிறகு, அவை ஒத்திவைக்கப்பட்டது. மதியம் 12 மணிக்கு கூடிய பிறகும், அதானி விவகாரத்தை எதிர்க்கட்சிகள் எழுப்பின. வழக்கமான நடவடிக்கைகளை ஒத்திவைத்துவிட்டு, அதானிக்கு அமெரிக்க நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்த விவகாரம், மணிப்பூர் வன்முறை, சம்பல் கலவரம் ஆகியவை குறித்து விவாதிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சி எம்.பி.க்கள் கோஷமிட்டனர்.

இதற்கு அவைத் தலைவர் ஓம் பிர்லா அனுமதி வழங்கவில்லை. இதனால், எதிர்க்கட்சி எம்.பி.க்கள் கடும் அமளியில் ஈடுபட்டனர். தொடர் அமளியால், நாள் முழுவதும் மக்களவை ஒத்திவைக்கப்பட்டது.

மாநிலங்களவை நேற்று கூடியதும், அதானி விவகாரத்தை காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே எழுப்பினார். மாநிலங்களவை தலைவர் ஜெகதீப் தன்கரை பேசவிடாமல் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் அமளியில் ஈடுபட்டனர்.

எதிர்க்கட்சிகளின் அமளியால் அவை ஒத்திவைக்கப்பட்டது. மீண்டும் கூடியபோதும், அதானி விவகாரம், சம்பல் கலவரம், மணிப்பூர் விவகாரத்தை குறிப்பிட்டு எதிர்க்கட்சி எம்.பி.க்கள் கோஷம் எழுப்பினர். தொடர் அமளி காரணமாக மாநிலங்களவையும் நேற்று நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டது.

முன்னதாக, நாடாளுமன்ற வளாகத்தில் செய்தியாளர்களிடம் பிரதமர் மோடி கருத்து தெரிவிக்கையில்,

"2024 ஆம் ஆண்டு நிறைவடைய உள்ளது. 2025 ஆம் ஆண்டை உற்சாகமாக வரவேற்க காத்திருக்கிறோம். 75 ஆவது ஆண்டு அரசமைப்பு தின கொண்டாட்டத்தை தொடங்க உள்ளோம். நாடாளுமன்றம் என்பது ஜனநாயகத்தின் கோயில். இங்கு ஆக்கப்பூர்வமான விவாதங்கள் நடைபெற அனைத்து எம்.பி.க்களும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.

சில எதிர்க்கட்சி எம்.பி.க்கள் அவையில் பொறுப்புடன் செயல்படுகின்றனர். இரு அவைகளும் சுமுகமாக நடைபெற வேண்டும் என்று விரும்புகின்றனர். ஆனால், துரதிர்ஷ்டவசமாக சிலர் நாடாளுமன்றத்தை முடக்க முயற்சி செய்கின்றனர்."– என்றார்.



# உக்ரைன் - ரஷ்ய போர் தீவிரம் மூத்த ஜெனரல் பணி நீக்கப்பட்டார்

உக்ரைன் போர் தொடர்பாகப் பொய்யான தகவல்களை அளித்த மூத்த ஜெனரல் ஒருவரை ரஷ்ய இராணுவம் நீக்கியுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையேயான போர் கடந்த சில வாரங்களில் மிக தீவிரமடைந்து வரும் நிலையில், ரஷ்ய பாதுகாப்புத் துறை அமைச்சகம் மூத்த ஜெனரல் ஒருவரை பணி நீக்கம் செய்துள்ளது.

அமெரிக்கா மற்றும் பிரித்தானியா ஆகிய நாடுகள் தங்களின் நீண்ட தூர ஏவுகணைகளைப் பயன்படுத்த ரஷ்யாவுக்கு அனுமதி அளித்தன.

இதனால், ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையேயான மோதல் மிகவும் மோசமானது. இதையடுத்து, ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் ஆண்ட்ரே பெலோசோவ் பல்வேறு அதிரடி நடவடிக்கைகளில் இறங்கியுள்ளார்.

அதன் ஒரு பகுதியாக ரஷ்யா மற்றும் உக்ரைன் போரில் மோசமாகச் செயல்படும் தளபதிகளை அதிரடியாக நீக்கியுள்ளார். உக்ரைனில் இன்னும் சில மாதங்களில் குளிர் காலம் ஆரம்பிக்கவுள்ளதால் விரைவில் உக்ரைனுக்குள் ஊடுருவ ரஷ்யா திட்டமிட்டுள்ளது.

இந்தச் சூழலில், சிவர்ஸ்க் பிராந்தியத்தில் ரஷ்ய ராணுவத்தை வழிநடத்திய தெற்கு குழுமத்தின் தளபதியான கர்னல் ஜெனரல் ஜெனடி அனாஷ்கின் அந்த பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

சிவர்ஸ்க் பகுதியில் இராணுவத்தில் பல்வேறு பிரச்சினைகள் இருப்பதாகவும் அங்குத் தலைமை சரி இல்லை என்று புகார் வந்த நிலையில், அங்கு ஜெனரலாக இருந்தவர் நீக்கப்பட்டுள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

இது தொடர்பாக ரஷ்யா ஆதரவாளர்கள் சிலர் சர்வதேச ஊடகங்களில், “அந்த பிராந்தியத்தில் பிரச்சினை இருந்தது. அதைத் தான் நாங்கள் தொடர்ந்து சொல்லி வந்தோம். அதைக் கண்டுபிடித்துச் சரி செய்ய 2 மாதங்கள் ஆகியுள்ளது.

செவர்ஸ்க் பிராந்தியத்தில் உள்ள போர் சூழல் குறித்து தவறான தகவல்களை வழங்கி வந்ததால் அனாஷ்கினை ரஷ்ய ராணுவம் நீக்கியுள்ளது” என்று கூறியுள்ளனர்.

ரஷ்யா உக்ரைன் போர் வரும் காலங்களில் மேலும் மோசமானதாக மாறும் என்று அஞ்சப்படுகிற சூழலில் ரஷ்ய ராணுவம் எடுத்துள்ள இந்த நடவடிக்கை முக்கியமானதாகப் பார்க்கப்படுகிறது.



# இம்ரான் கானை விடுதலை செய்யக்கோரி பாகிஸ்தானின் ஆர்ப்பாட்டப் பேரணிகள்

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான் கானை விடுதலை செய்யக் கோரி நாடளாவிய ரீதியாக நேற்று ஆர்ப்பாட்ட பேரணிகள் நடைபெற்றன.

ஆர்ப்பாட்டக்காரர்கள் பேரணிகளாக நேற்று முன்தினம் முதல் பாகிஸ்தானின் பல பகுதிகளிலும் இருந்து தலைநகர் இஸ்லாமாத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் ஒரு பகுதியாகப் பல்லாயிரக் கணக்கான போராட்டக்காரர்கள் தலைநகர் இஸ்லாமாபாத்தை முடக்கியுள்ளனர்.

இஸ்லாமாத்தில் உள்ள சில நெடுஞ்சாலை போக்குவரத்துக்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன், சில பகுதிகளில் கையடக்க தொலைத் தொடர்பு சேவைகள் மற்றும் இணையச் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

நேற்று ஆரம்பமான இந்த அணிவகுப்பு போராட்டக்காரர்களுக்கு எதிராக பொலிஸார் கண்ணீர்ப் புகை பிரயோகத்தை மேற்கொண்டுள்ளனர். இது தவிர, நூற்றுக்கணக்கானவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இம்ரான் கானின் மனைவியும் முன்னாள் முதல் பெண்மணியுமான புஷ்ரா பீபி பேரணியை வழி நடத்துபவர்களில் ஒருவர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஊழல் குற்றச்சாட்டில் இம்ரான் கானுக்கு மூன்று வருடச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

இந்த குற்றச்சாட்டை அவர் தொடர்ந்தும் மறுத்து வருகிறார்.

அதேவேளை, இம்ரான் கானின் கட்சியைச் சேர்ந்த உயர்மட்ட தலைவர்கள், ராவல்பிண்டி சிறைச்சாலைக்குச் சென்று அவரை சந்தித்துள்ளனர்.

அவரின் விடுதலைக்காக தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் ஆர்ப்பாட்டங்கள் குறித்த விபரங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்ரான் கானின் கட்சியான தெஹ்ரீக்-இ-இன்சாப் கட்சியின் தலைமையில் மேற்கொள்ளப்பட்டு வரும் போராட்டம் மற்றும் பேரணி என்பன சட்டவிரோதமானது என இஸ்லாமாபாத் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

பக்கங்கள் 03

# கனடா முரசு

செவ்வாய்க்கிழமை 26/11/2024

## கனடாவில் இடம்பெற்ற வீடுடைப்பு சம்பவம் தொடர்பில் 7 பேர் கைது

கனடாவில் வீடுடைப்பு சம்பவமொன்றுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் ஏழு பதின்ம வயதினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் 13 வயதான 02▶





# கனடாவில் மனைவியைக் கொன்ற 81 வயது முதியவருக்கு தண்டனை

**கனடாவில் மனைவியைக் கொன்ற குற்றச்சாட்டின் பேரில் 81 வயதான முதியவர் ஒருவருக்கு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.**

**அல்சீமர் நோயினால் பாதிக்கப்பட்டிருந்த தனது மனைவியை அந்த முதியவர் கொலை செய்துள்ளார்.**

**தனது மனைவியை கொலை செய்ததாக ஒப்புக்கொண்ட முதியவருக்கு கியூபெக் நீதிமன்றம் 10 ஆண்டுகளும் 6 மாதங்களும் சிறைத் தண்டனை விதித்துள்ளது.**

81 வயதான கிலிஸ் பிரிசார்ட் என்ற நபரே இவ்வாறு தண்டிக்கப்பட்டுள்ளார். 79 வயதான லிவிஸ்கியூ என்ற தனது மனைவியை பிரிசார்ட் கழுத்தை நெரித்து படுகொலை செய்துள்ளார்.

கோபத்தில் படுகொலை செய்யவில்லை எனவும் அன்பினால் இவ்வாறு கொலை செய்தேன் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.




# பிரம்டனில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் பலி

கனடாவின் பிரம்டனில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். இந்த விபத்தில் மேலும் ஐந்து பேர் காயமடைந்துள்ளனர். இரண்டு வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என பீல் பிராந்திய பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வானில் பயணம் செய்த நபர் ஒருவரே உயிரிழந்துள்ளார். வாகனங்கள் பந்தயத்தில் ஈடுபட்டிருக்கலாம் என தெரிவிக்கப்படுகின்றது.



# கனடாவிற்குள் வருவோரை பாதுகாப்பதற்கு புதிய சட்டம்

கனடாவில் குடியேறும் புதியவர்களை பாதுகாக்கும் வகையிலான சட்டம் ஒன்று அறிமுகம் செய்யப்பட உள்ளது.

கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தில் இந்த சட்டம் அறிமுகம் செய்யப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.கனடாவிற்குள் புதிதாக வருவோர் ஏமாற்றப்படுவதனை தடுக்கவும் மோசடிகளில் சிக்குவதனை தவிர்க்கவும் இந்த புதிய சட்டம் உருவாக்கப்பட உள்ளது.

இது தொடர்பில் ஒன்றாரியோ அரசாங்கம் அண்மையில் தகவல் வெளியிட்டு இருந்தது.

குடிவரவு பிரதிநிதிகள் என்ற பெயரில் புதிதாக நாட்டுக்குள் பிரவேசித்தவர்களை ஏமாற்றி பணம் பறிக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என தெரிவிக்கப்படுகிறது.

கனடாவின் குடிவரவு முறைமையின் உதவிகளை பெற்றுக் கொள்வதற்கு புதியவர்கள், பல்வேறு நபர்களின் உதவியை பெற்றுக் கொள்கின்றனர் என தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு உதவி வழங்குபவர்கள் சில நேரங்களில் புதியவர்களை ஏமாற்றுகின்றனர் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

குடியேறுவதற்கும் தொழில்களை பெற்றுக் கொள்வதற்குமான போலி ஆவணங்களை வழங்கி புதியவர்கள் ஏமாற்றப்படுகின்றனர் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எனவே இவ்வாறான மோசடிகளில் இருந்து புதியவர்களை பாதுகாக்கும் நோக்கில் ஒன்றாரியோ மாகாண அரசாங்கம் புதிய சட்டமொன்றை அறிமுகம் செய்ய உள்ளது.

# தெற்காசிய மக்களை தூற்றிய நபரை தேடுகின்றனர் ரொறன்ரோ பொலிஸார்

கனடாவின் ரொறன்ரோவில் தெற்காசிய சமூகத்தை தூற்றும் வகையில் அச்சுறுத்தல் விடுத்த நபர் ஒருவரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

மேற்படி நபர் கத்தியுடன் தெற்காசிய சமூகத்தவர்களை அச்சுறுத்தினார் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த குற்ற செயலுடன் தொடர்புடைய நபரை பொலிஸார் தேடி வருகின்றனர். அந்த நபரின் புகைப்படம் ஒன்றையும் வெளியிட்டுள்ளனர்.

ரொறன்ரோ மேற்கு பகுதியில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு அச்சுறுத்தலுக்கு உள்ளானவர்கள் பொலிஸாரிடம் சம்பவம் குறித்து முறைப்பாடு செய்துள்ளனர்.

இதனை தொடர்ந்து பொலிஸார் சந்தேக நபரை கைது செய்ய விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.



சில இடங்களில் அந்த நபர் இவ்வாறு தெற்காசிய சமூகத்தை வெறுப்புணர்வு அடிப்படையில் கடுஞ்சொற்களால் திட்டி, அச்சுறுத்தல் விடுத்துள்ளார் என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறுவன் ஒருவனும் உள்ளடங்குகின்றார் என தெரிவிக்கப்படுகின்றது.

வோகனில் வீடொன்றை உடைத்து கொள்ளையிட முயற்சிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொள்ளையிடுவதற்காக திருடப்பட்ட வாகனங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்டவர்கள் 13 முதல் 18 வயது வரையிலானவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவர் தப்பிச்சென்றுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் ஏதேனும் தகவல்கள் தெரிந்தால் அறிவிக்குமாறு பொதுமக்களிடம் கோரப்பட்டுள்ளது.





# கொலைக் குற்றச்சாட்டில் நயகராவில் ஒருவர் கைது

நயகராவில் ஒருவர் மீது கொலைக் குற்றம் சுமத் தப்பட்டுள்ளது. அண்மையில் நயகராக சென் கதரீன்ஸ் பகுதியில் இடம்பெற்ற துப்பாக் கிச் சூட்டு சம்பவம் தொடர் பில் மேற்படி நபர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

டெனியல் டேல் என்ற நபருக்கு எதிராக இவ்வாறு கொலைக் குற்றச்சாட்டு சுமத்தப்பட் டுள்ளது.

இந்த சம்பவத்தில் ஒருவர் கொல்லப் பட்டுள்ளார். மற்றுமொருவர் படுகாயமடைந் துள்ளார்.

திட்டமிட்ட அடிப்படையில் இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் இந்த சம்பவத்துடன் மற்றுமொருவர் தொடர்பு பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படு கின்றது.

எனினும் அந்த நபர் தொடர்பிலான தகவல்கள் இருந்தால் பொலிஸாருக்கு அறிவிக்குமாறு கோரப்பட்டுள்ளது.



